முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 03.09.2025 அ.வ.எண். 169/2019 வா.சா.1.சுதர்சன், த/பெ.ரமேஷ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 10.06.1983 ல் ஏற்பட்ட Arbitration Award அடிப்படையில் தான் இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். Arbitration Award யார் யாருக்கு இடையே நடைபெற்றது என்றால் ஆறுமுகம் பிள்ளை, அவரது மனைவி அய்யம்மாள்,அவரது மகன் நடராஜன் ஆகியோருக்குள் நடைபெற்றது. மேற்படி மூவர் சொத்து, அவரது குடும்ப சொத்துக்களும் சேர்த்து தான் Arbitration Award ஏற்பட்டது என்றால் சரியல்ல அவர்களுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் மட்டும் தான். மேற்படி நடராஜன் எனது தாத்தா என்றால் சரிதான். எனது தாத்தாவின் மனைவி பெயர் ஜீவா என்றால் சரிதான். நடராஜனுக்கும், ஜீவாவிற்கும் எத்தனை குழந்தைகள் என்றால் ரமேஷ் என்ற மகனும் உமா என்ற மகளும் ஆவார்கள். நான் ரமேஷ் ன் ஒரே மகன் என்றால் சரிதான்.

2) எனது அப்பா ரமேஷ் எப்போது காலமானார் என்றால் 20.09.2014 ல் காலமானார். எனது பாட்டி ஜீவா 17.05.2005 அன்று காலமானார் என்றால் சரிதான்.1 ம் பிரதிவாதி மணிமேகலை யார் என்றால் தெரியாது. 2 ம் பிரதிவாதி நித்தியபிரியா யார் என்றால் தெரியாது, நான் இதுநாள் வரை அவர்களை பார்த்தது கிடையாது. பார்க்காத நபர்கள் பேரில் ஏன் வழக்கு போட்டேன் என்றால் ஏற்கனவே மேற்படி 2 பிரதிவாதிகளும் எங்கள் பேரில் சொத்துகளில் அவர்களுக்கும் பங்கு உள்ளது என்று வழக்கு போட்டிருந்தார்கள். எனது பிராதில் மணிமேகலையின் மகள் நித்தியபிரியா என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தாவின் வைப்பு நங்கை என்று 1 ம் பிரதிவாதியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

3) அதே போல் 2 ம் பிரதிவாதி நடராஜனுக்கும் வைப்பு நங்கை மணிமேகலைக்கும் மகள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஜூப்லி கிணறு வீதி கதவு எண். 63 என குறிப்பிட்டிருப்பதும் தாவா சொத்தில் ஒரு அயிட்டம் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனதுதாத்தா நடராஜன் இருக்கிறார்,அவருடன் யார் வசித்து வருகிறார் என்றால் அவர் தனியாகத்தான் வசித்து வருகிறார். எனதுதாத்தா வசித்துவரும் அதே முகவரியை கொடுத்து தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு மற்றும் அழைப்பாணை அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

4) தாவா சொத்து ABC என 3 சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான் A அட்டவணை சொத்தின் முதல் அயிட்டம் தரைமட்டம், 2 வது அயிட்டம் மேல்மாடி என்றால் சரிதான். 3, 4, 5 அயிட்ட சொத்துக்கள் தபால் அலுவலகத்திற்கு எதிர் புறம் உள்ள கதவு எண் 51 ன் தரைதளம் 3 வது அயிட்டமாகவும் முதல் மாடி 4 வது அயிட்டமாகவும் 2 ,3 மாடிகள் 5 வது அயிட்டமாகவும்சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Arbitration Award ஐ நான் முழுவதுமாக படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். Arbitration Award படி ஆறுமுகம் பெயரிலுள்ள சொத்துக்கள் முழுவதையும் ஆறுமுகம்,அய்யம்மாள், நடராஜன் ஆகியோர்கள் ஆயுள் பரியந்தம் எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் Arbitration நிபந்தனைப்படி Award எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) 2 அயிட்ட சொத்து ஜீவாவின் ஆயுள் பரியந்தம் வரை அனுபவித்து வந்து பாராதீனம் செய்யாமல் அதன் பின் ரமேஷ் அவரது ஆயுள் வரை அனுபவித்து கொள்ள வேண்டியது என்றால் சரிதான். Arbitration Award ல் உள்ள

ஒப்பம்/-(R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

மூன்று நபர்களும் அனுபவித்து வந்து அதன் பின் ஜீவாவின் ஆயுள் பரியந்தம் வரை அனுபவித்து வந்து அதன்பின்னிட்டு ரமேஷ் அவரது ஆயுள் வரை அனுபவித்து வந்து அதன் பின் அவரது வாரிசுகள் அடைந்து கொள்ள வேண்டியது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். சட்டப்படி ஒரு பத்திரம் அல்லது Award ஆக இருந்தாலும் ஒரு நிபந்தனை மட்டும் தான் எழுதமுடியும் என்றும் அதற்கு மேல் நிபந்தனைகள் இருந்தால் அந்த நிபந்தனைகள் செல்லாது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.